நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம்,
சேப்பாக்கம், சென்னை–5.

ந.க..எண். 31159/2018/டிபி3 தேதி:– 03.12.2018.

## சுற்றிக்கை

பொருள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வீடுகள்– வீட்டுவசதிவாரியத்தால் நகர்ப்புற உள்ளாட்சிகளில் கட்டும் கட்டுமானங்களுக்கு அனுமதி அளிப்பது குறித்து வழிமுறைகளை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: அரசு கடிதம் எண். 23027/HB4/2018, வீ (ம) ந.மே.துறை, நாள். 16.11.2018.

*********

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் கட்டப்படும் வீடுகளுக்கு நகப்புற உள்ளாசிகளில் அனுமதி வழங்குவது தொடர்பாக 22.11.2018 அன்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் முதன்மைச்செயலாளர் அவர்களால் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர், நகராட்சி நிர்வாக கூடுதல் ஆணையர், இணை இயக்குநர் (நகரமைப்பு) மற்றும் நாமக்கல் நகராட்சி ஆணையர் உடன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட முடிவுகளின்படி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் நகர்ப்புற உள்ளாட்சிகளில் கட்டப்படும் கட்டுமானங்களுக்கு நகராட்சி/மாநகராட்சியில் கட்டிட அனுமதி வழங்கும் சமயத்தில் கீழ்க்கண்ட வழிமுறைகளை கடைபிடிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

1. மனைப்பிரிவு வரைபடம் நகர்ஊரமைப்பு துறையின்அனுமதி பெறப்பட்டிருப்பின், உரிய முறையில் சாலை, வடிகால், பாதாளசாக்கடை வசதி, குடிநீர் வசதி, பொது இடங்களில் சுற்றுவேலி முதலானவற்றை விதிகளின்படி அமைத்து பொறியாளரின் சான்று பெற்ற பின் பராமரிப்பிற்கு உள்ளாட்சிகளால் தான சாசனம் வாயிலாக எடுக்கப்படவேண்டும்.

2. காலிமனை வரி வசூல் குறித்து பல்வேறு நிலைகளை கையாளப்படுவதாக தெரிவிக்கப்படுவதால், அரசாணை G.O. (ms) No. 151. நாள். 20.08.2009–ன் அடிப்படையில் 13 அரையாண்டுகள் வசூலிக்கவேண்டும்.

3. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைமைப்பொறியாளர், கட்டிட வரைபடங்கள் தயார் செய்வதால், சம்பந்தப்பட்ட பொறியாளர்கள் கையொப்பம் செய்த நிலையில், உள்ளூர் அங்கீராம்பெற்ற வரைபட வரைவாளராக கையொப்பம் வாங்க நிர்பந்திக்க தேவையில்லை. ஆனால், வரைபட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் கட்டிட விதிகள் 1972–ன்படி மற்றும் நகர் ஊரமைப்பு சட்ட விதிகளை பூர்த்தி செய்யும் வகையில் தயார் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

4. அரசு சார்ந்த துறை அலுவலர்கள் விண்ணப்பம் செய்வதால், அவர்கள் சான்றொப்பம் செய்வதால், Notary Pubilc Signatutre /Licensed Surveyor–யின் சான்றொப்பம் பெற வேண்டியதில்லை.

5. தொழிலாளர் நல வாரியம் நிதி தொகையை TNHB துறை நேரடியாக அத்துறைக்கு செலுத்துவாதாக தெரிவிப்பதால், சம்பந்தப்பட்ட பொறியாளரிடம் தொகை செலுத்தப்படும் விபரம் குறித்த சான்று கடிதம் அல்லது நேரடியாக செலுத்திய ரசீது பெற்றுக்கொண்டு அனுமதி வழங்கலாம்.

6. சில நகராட்சிகளில் தண்ணீர் வரி சமர்பிக்கப் வேண்டும் என வலியுறுத்துவாதாக தெரிவிக்கப்பட்டது. உத்தேச கட்டிங்களுக்கு தண்ணீர் வரி ரசீது சமர்பிக்க கோர வேண்டியதில்லை.

ஒம்/– மா. அசோகன்
நகராட்சி நிர்வாக ஆணையருக்காக

பெறுநர்–
அனைத்து மாநகராட்சி / நகராட்சி ஆணையர்கள்

நகல்:–
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,
493, அண்ணாசலை, சென்னை– 35.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

3/12/18
கண்காணிப்பாளர்